# Mizuho Financial Group, Inc.

## ஒருங்கிணைந்த இருப்புநிலை அறிக்கை

**மார்ச் 31 நிலவரப்படி**

| | 2023 | 2022 |
|---|---|---|
| | | மில்லியென் யென்களில் (Yen) |
| **சொத்துகள்** | | |
| ரொக்கம் மற்றும் வங்கிகளிலிருந்து வரவேண்டிய பாக்கிகள் | ¥ 67,152,100 | ¥ 51,359,301 |
| கோரிய கணமே அடைபடும் கடன்கள் மற்றும் வாங்கப்பட்ட நிலுவை விலைச்சீட்டுகள் | 1,386,895 | 940,008 |
| மறுவிற்பனை ஒப்பந்தங்களின்கீழ் பெறத்தக்கவை | 11,693,419 | 12,750,363 |
| பத்திரங்களைக் கடன் வாங்கும் பரிவர்த்தனைகளின் கீழ் செலுத்தப்படும் உறுதிமொழி வைப்புத்தொகைகள் | 1,897,429 | 2,340,089 |
| வாங்கப்பட்ட மற்றக் கடன்கள் | 3,836,735 | 3,476,021 |
| வர்த்தக் சொத்துகள் | 17,404,494 | 13,221,415 |
| அறக்கட்டளையில் வைக்கப்பட்டுள்ள பணம் | 514,607 | 591,183 |
| பத்திரங்கள் | 37,363,140 | 44,641,060 |
| கடன்கள் மற்றும் விலைக்கழிக்கப்பட்ட விலைச்சீட்டுகள் | 88,687,155 | 84,736,280 |
| அந்நியச் செலாவணிச் சொத்துகள் | 2,408,587 | 2,627,492 |
| வர்த்தகச் சொத்துகளைத் தவிர மற்ற வழிப்பெறுதிகள் | 2,184,875 | 2,277,160 |
| மற்றச் சொத்துகள் | 8,689,547 | 7,797,796 |
| புலனாகும் நிலைச் சொத்துகள் | 1,105,851 | 1,095,977 |
| புலனாகா நிலைச் சொத்துகள் | 572,719 | 601,292 |
| நிகரம் வரையறுக்கப்பட்ட பலன் சொத்து | 859,271 | 863,217 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துகள் | 316,168 | 184,594 |
| ஏற்புகள் மற்றும் உறுதிமொழிகளுக்கான வாடிக்கையாளர்களின் கடன்பாடுகள் | 8,905,643 | 8,346,878 |
| கடன்களில் ஏற்பட வாய்ப்புள்ள இழப்புகளுக்கான காப்புநிதிகள் | (720,437) | (783,886) |
| முதலீடுகளில் ஏற்பட வாய்ப்புள்ள இழப்புகளுக்கான காப்புநிதிகள் | (1) | (107) |
| **மொத்தச் சொத்துகள்** | **¥ 254,258,203** | **¥ 237,066,142** |
| **கடன்பாடுகள்** | | |
| வைப்புத்தொகைகள் | ¥ 150,498,976 | ¥ 138,830,872 |
| பேரத்துக்குட்பட்ட வைப்புத்தொகைச் சான்றிதழ்கள் | 13,788,347 | 16,868,931 |
| கோரிய கணம் அடைபடும் பணம் மற்றும் விற்கப்பட்ட விலைச்சீட்டுகள் | 1,814,873 | 1,278,050 |
| மறுகொள்முதல் ஒப்பந்தங்களின்கீழ் செலுத்தவேண்டியவை | 25,735,560 | 20,068,779 |
| பத்திரக் கடன் பரிவர்த்தனைகளின் கீழ் பெறப்பட்ட உத்தரவாத வைப்புத்தொகைகள் | 757,842 | 1,172,248 |
| குறுங்காலப் பிணையற்ற உறுதிமொழித் தாள் | 1,782,111 | 1,775,859 |
| வர்த்தகக் கடன்பாடுகள் | 12,698,007 | 9,608,976 |
| கடன்வாங்கப்பட்ட பணம் | 4,155,480 | 6,590,527 |
| அந்நிச் செலாவணிக் கடன்பாடுகள் | 671,552 | 1,508,453 |
| குறுங்காலப் பிணைப்பத்திரங்கள் | 477,141 | 537,167 |
| பிணைப்பத்திரங்கள் மற்றும் உறுதிமொழித்தாள்கள் | 11,371,189 | 10,714,004 |
| அறக்கட்டளைக் கணக்குகளுக்குக் கொடுக்கவேண்டியவை | 1,534,097 | 1,167,284 |
| வர்த்தகக் கடன்பாடுகள் தவிர்த்து மற்ற வழிப்பெறுதிகள் | 2,749,138 | 2,770,852 |
| மற்றக் கடன்பாடுகள் | 7,777,025 | 6,301,484 |
| வெகுமதிக் கொடுப்பனவுகளுக்கான காப்புநிதிகள் | 126,694 | 120,052 |
| மாறக்கூடிய இழப்பீட்டுக்கான காப்புநிதிகள் | 2,381 | 2,278 |
| நிகரம் வரையறுக்கப்பட்ட பலன் கடன்பாடுகள் | 68,429 | 71,774 |
| இயக்குநர் மற்றும் பெருநிறுவனத் தணிக்கையாளர் ஓய்வுப் பலன்களுக்கான காப்புநிதி | 539 | 557 |
| கடன்களின் விற்பனையில் ஏற்பட வாய்ப்புள்ள இழப்புகளுக்கான காப்புநிதி | 15,049 | 1,309 |
| உறுதியற்ற தற்செயல்நேர்வுகளுக்கான காப்புநிதிகள் | 13,706 | 6,622 |
| வைப்புத்தொகைகளைத் திருப்பியளிப்பதற்கான காப்புநிதி | 13,695 | 17,620 |
| கடன் பத்திரங்களைத் திருப்பிச் செலுத்துவதற்கான காப்புநிதி | 7,798 | 10,504 |
| சிறப்புச் சட்டங்களின் கீழ் வைக்கப்படும் காப்புநிதிகள் | 3,352 | 3,132 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிக் கடன்பாடுகள் | 22,391 | 30,923 |
| நிலத்திற்கான மறுமதிப்பீட்டுக் காப்புநிதிக்கான ஒத்திவைக்கப்பட்ட வரிக் கடன்பாடுகள் | 58,711 | 59,962 |
| ஏற்புகள் மற்றும் உறுதிமொழிகள் | 8,905,643 | 8,346,878 |
| **மொத்தக் கடன்பாடுகள்** | **¥ 245,049,740** | **¥ 227,865,110** |
| **நிகரச் சொத்துகள்** | | |
| பொதுப் பங்கு | ¥ 2,256,767 | ¥ 2,256,767 |
| மூலதன உபரி | 1,129,267 | 1,125,324 |
| தக்கவைக்கப்பட்ட வருவாய் | 5,093,911 | 4,756,435 |
| கருவூலப் பங்கு | (8,786) | (8,342) |
| **மொத்தப் பங்குதாரர்களின் சமபங்கு** | **8,471,160** | **8,130,185** |
| மற்றப் பத்திரங்களில் உணரப்படாத ஆதாயங்களின் நிகர மதிப்பு | 564,495 | 719,822 |
| பாதுகாப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட லாபங்கள் அல்லது இழப்புகள் | (358,102) | (76,757) |
| நிலத்திற்கான மறுமதிப்பீட்டுக் காப்புநிதி | 129,321 | 132,156 |
| வெளிநாட்டு நாணய மாற்றுச் சரிகட்டுதல்கள் | 144,093 | 2,346 |
| வரையறுக்கப்பட்ட பலன் வழங்கும் திட்டங்களின் மறுஅளவீடுகள் | 182,306 | 169,652 |
| சொந்தக் கடன் இடரைச் சரிகட்டுதல்கள், நிகர வரி | 19 | (23) |
| **திரட்டப்பட்ட மற்ற விரிவான வருமானங்களின் மொத்தம்** | **662,133** | **947,197** |
| பங்கைக் கையகப்படுத்தும் உரிமைகள் | 5 | 94 |
| முடிவெடுப்பதில் கட்டுப்பாடில்லாப் பங்குரிமைகள் | 75,163 | 123,555 |
| **மொத்த நிகரச் சொத்துகள்** | **9,208,463** | **9,201,031** |
| **மொத்தக் கடன்பாடுகள் மற்றும் நிகரச் சொத்துகள்** | **¥ 254,258,203** | **¥ 237,066,142** |

## ஒருங்கிணைந்த வருமான அறிக்கைகள்

**மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடைந்த நிதியாண்டுகளுக்கு**

| | 2023 | 2022 |
|---|---|---|
| | | யென் (Yen) மில்லியன்களில் |
| **சாதாரண வருமானம்** | **¥ 5,778,772** | **¥ 3,963,091** |
| வட்டி வருமானம் | 3,178,214 | 1,309,009 |
| நம்பிக்கைசார்ந்த வருமானம் | 58,958 | 60,490 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 915,534 | 905,575 |
| வர்த்தக வருமானம் | 992,631 | 1,017,889 |
| மற்றச் செயல்பாட்டு வருமானம் | 452,853 | 393,956 |
| மற்றச் சாதாரண வருமானம் | 180,579 | 276,170 |
| **சாதாரணச் செலவுகள்** | **4,989,165** | **3,403,244** |
| வட்டிச் செலவுகள் | 2,217,636 | 315,550 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவுகள் | 163,841 | 164,579 |
| வர்த்தகச் செலவுகள் | 657,923 | 730,204 |
| மற்றச் செயல்பாட்டுச் செலவுகள் | 280,386 | 224,116 |
| பொது மற்றும் நிர்வாகச் செலவுகள் | 1,445,283 | 1,392,896 |
| மற்றச் சாதாரண செலவுகள் | 224,095 | 575,896 |
| **சாதாரண ஆதாயங்கள்** | **¥ 789,606** | **¥ 559,847** |
| **அசாதாரண ஆதாயங்கள்** | **¥ 50,888** | **¥ 78,196** |
| நிலையான சொத்துகளை மாற்றிவிட்டதில் அடைந்த ஆதாயம் | 3,260 | 3,938 |
| ஊழியர் ஓய்வுக்காலப் பலன் அறக்கட்டளையை ரத்து செய்ததன் மூலம் கிடைத்த ஆதாயங்கள் | 47,627 | 74,254 |
| பிற அசாதாரண ஆதாயங்கள் | - | 3 |
| **அசாதாரண இழப்புகள்** | **61,530** | **34,171** |
| நிலையான சொத்துக்களை மாற்றிவிட்டதால் ஏற்படும் இழப்புகள் | 7,462 | 6,585 |
| நிலையான சொத்துக்கள் மதிப்புக்குன்றுவதால் ஏற்படும் இழப்புகள் | 51,545 | 27,585 |
| இணை நிறுவனங்களின் பங்குகளின் விற்பனையில் ஏற்படும் இழப்புகள் | 2,301 | - |
| பிற அசாதாரண இழப்புகள் | 220 | - |
| **வருமான வரிக்கு முந்தைய வருமானம்** | **778,964** | **603,872** |
| வருமான வரிகள்: | | |
| தற்போதைய | 180,716 | 130,079 |
| வருமான வரிகளைத் திரும்பப் பெறுதல் | (9,911) | (12,738) |
| ஒத்திவைக்கப்பட்டது | 48,029 | (56,652) |
| மொத்த வருமான வரிகள் | 218,834 | 60,688 |
| **ஆதாயம்** | **560,130** | **543,183** |
| முடிவெடுப்பதில் கட்டுப்பாடில்லாப் பங்குரிமைகளுக்கு உரித்தான ஆதாயம் | 4,602 | 12,703 |
| **பெற்றோர்ப் பங்குரிமையாளர்களுக்குக்கு உரிய ஆதாயம்** | **¥ 555,527** | **¥ 530,479** |

## மூலதன விகிதம்

**மார்ச் 31 நிலவரப்படி**

| | 2023 | 2022 |
|---|---|---|
| **மொத்த மூலதன விகிதம் (ஒருங்கிணைந்த)** | **16.05%** | 17.53% |
| **அடுக்கு 1 மூலதன விகிதம் (ஒருங்கிணைந்த)** | **13.91%** | 15.00% |
| **பொதுவான சமபங்கு அடுக்கு 1 மூலதன விகிதம் (ஒருங்கிணைந்த)** | **11.80%** | 12.46% |

## இயக்குநர்கள்

**மார்ச் 31, 2023 நிலவரப்படி**

Yoshimitsu Kobayashi
Ryoji Sato
Takashi Tsukioka
Masami Yamamoto
Izumi Kobayashi
Seiji Imai
Hisaaki Hirama
Masahiro Kihara
Makoto Umemiya
Motonori Wakabayashi
Nobuhiro Kaminoyama
Kotaro Ohno
Hiromichi Shinohara
Yumiko Noda

## சார்பற்ற தணிக்கையாளர் அறிக்கை

இயக்குநர்கள் குழு
Mizuho Financial Group, Inc.

**கருத்து**
Mizuho Financial Group, Inc. மற்றும் அதன் ஒருங்கிணைந்ததுணை நிறுவனங்களின் (குழுமம்) ஒருங்கிணைந்த நிதிநிலைஅறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்துள்ளோம். அதில் மார்ச் 31,2023 நிலவரப்படி உள்ள ஒருங்கிணைந்த இருப்புநிலைஅறிக்கையும், வருமானம், விரிவான வருமானம்,நிகரச் சொத்துக்களில் மாற்றங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அறிக்கைகளும் அந்நிதி ஆண்டிற்கான பணப்புழக்கங்கள் மற்றும்ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புகளும்உள்ளடங்கும்.

எங்களின் கருத்துப்படி, இதனுடன் உள்ள ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள், அனைத்துப் பொருண்மை வகைகளிலும், பின்வரும் தகவல்களை நியாயமாக வழங்குகின்றன, அவை: ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்கிய, மார்ச் 31, 2023 நிலவரப்படி குழுமத்தின் ஒருங்கிணைந்த நிதி நிலை, ஒருங்கிணைந்த நிதிச் செயல்திறன் மற்றும் அதன் ஒருங்கிணைந்த பணப்புழக்கங்கள்.

**கருத்துக்கான அடிப்படை**
ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தணிக்கைத் தரநிலைகளின்படி நாங்கள் எங்கள் தணிக்கையை நடத்தினோம். அந்தத் தரங்களின்படி அமைந்த எங்களின் பொறுப்புகள், எங்கள் அறிக்கையின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள் பகுதியில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. ஜப்பானில் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்குத் தொடர்புடைய நெறிமுறைத் தேவைகளுக்கு இணங்க நாங்கள் குழுமத்திலிருந்து சார்பற்ற தனி நிறுவனமாக இருக்கிறோம், மேலும் இந்தத் தேவைகளுக்கு இணங்க எங்கள் பிற நெறிமுறைப் பொறுப்புகளையும் நாங்கள் நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் பெற்ற தணிக்கைச் சான்றுகள் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

**மற்றத் தகவல்**
மற்றத் தகவலானது Mizuho Financial Group, Inc. நிறுவனத்தின் நிதித் தரவுகளில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டுள்ளது, அந்த நிதித் தரவுகள் தணிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைக் கொண்டுள்ளன, ஆனால் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் மற்றும் எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையை உள்ளடக்கவில்லை. மற்றத் தகவல்களைத் தயாரித்து வெளியிடுவதற்கு நிர்வாகமே பொறுப்பு. குழுமத்தின் மற்றத் தகவல்களை அறிக்கையளிக்கும் செயல்முறையை மேற்பார்வையிடுவது தணிக்கைக் குழுவின் பொறுப்பாகும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் பற்றிய எங்கள் கருத்து மற்றத் தகவல்களை உள்ளடக்காது மற்றும் அது தொடர்பில் எந்த விதமான உறுதியான முடிவையும் நாங்கள் வெளிப்படுத்தவில்லை.

ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் எங்கள் தணிக்கை தொடர்பாக, மற்றத் தகவல்களைப் படித்து, அவ்வாறு படிக்கும்போது, மற்றத் தகவல்கள் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளுக்குப் புறம்பானதாக அல்லது தணிக்கையில் பெறப்பட்ட எமது அறிவுக்குப் புறம்பானதாக அல்லது பொருட்படுத்துகிற வகையில் வேறுவிதமாகத் தோன்றுகிறதா என்பதைக் கருத்தில் கொள்வது எங்கள் பொறுப்பு.

நாங்கள் செய்த பணியின் அடிப்படையில், இந்த மற்றத் தகவலில் தவறான அறிக்கையிடல் இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், அந்த உண்மையை நாங்கள் தெரிவிக்க வேண்டும்.

இது தொடர்பாக நாங்கள் தெரிவிக்க எதுவுமில்லை.

**ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகள் தொடர்பாக நிர்வாகம் மற்றும் தணிக்கைக் குழுவின் பொறுப்புகள்**
ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளுக்கு இணங்க இந்த ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்து நியாயமான முறையில் வழங்குவதற்கு நிர்வாகம் பொறுப்பாகும், மேலும் நிர்வாகம் தீர்மானிக்கும் அத்தகைய உள்-கட்டுப்பாடு, மோசடி அல்லது பிழை காரணமாகப் பொருட்படுத்தும் அளவிலான தவறுகளற்ற ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதைச் செயல்படுத்துவது அவசியம்.

தொடர்ந்து இயங்கும் தன்மை தொடர்புடைய விஷயங்களில் ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளின் தேவைப்படி ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தயாரிப்பதில், குழுமத்தின் தொடர்ந்து இயங்கும் திறனை மதிப்பிடுவதும், அதை வெளிப்படுத்துவதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

குழுமத்தின் நிதி அறிக்கையிடல் செயல்முறையை மேற்பார்வையிடுவது தணிக்கைக்குழுவின் பொறுப்பாகும்.

**ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள்**
ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், மோசடி அல்லது பிழை காரணமாகத் தவறான அறிக்கையிடல் இன்றி உள்ளதா என்பதைப் பற்றிய நியாயமான உத்தரவாதத்தைப் பெறுவதும், எங்கள் கருத்தை உள்ளடக்கிய தணிக்கையாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எங்கள் நோக்கங்களாகும். தவறான அறிக்கைகள் மோசடி அல்லது பிழை காரணமாக எழலாம் மேலும் அவை தனித்தனியாகவோ அல்லது மொத்தமாகவோ, இந்த ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயனர்களின் பொருளாதார முடிவுகளை ஒரு மிதமான அளவுக்குப் பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தணிக்கைத் தரநிலைகளுக்கு இணங்க, தணிக்கையின் ஒரு பகுதியாக, நாங்கள் தணிக்கை முழுவதும் தொழில்முறைத் தீர்ப்பை வழங்குகிறோம் மற்றும் தொழில்முறைச் சந்தேகத்தைப் பராமரிக்கிறோம். மேலும் நாங்கள்:

- மோசடி அல்லது பிழை காரணமாக, ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளில் பொருட்படுத்தும் வகையிலான தவறுகளைக் கொண்ட அறிக்கையிடலுக்கான அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிட்டோம், அந்த அபாயங்களுக்குப் பதிலளிக்கும் வகையில் தணிக்கை நடைமுறைகளை வடிவமைத்துச் செயல்படுத்தியிருக்கிறோம், மேலும் எங்கள் கருத்துக்கு அடிப்படையை வழங்க போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கைச் சான்றுகளைப் பெற்றிருக்கிறோம்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளைத் தணிக்கை செய்வதன் நோக்கம் குழுமத்தின் உள்-கட்டுப்பாட்டின் செயல்திறன் பற்றிய கருத்தை வெளிப்படுத்தவில்லை என்ற போதிலும் கூட, எங்கள் இடர் மதிப்பீடுகளுக்கான சூழ்நிலைகளில் பொருத்தமான தணிக்கை நடைமுறைகளை வடிவமைக்க, தணிக்கை தொடர்புடைய குழுமத்தின் உள்-கட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டோம்.
- நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளின் சரியான தன்மை, கணக்கியல் மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் தொடர்புடைய வெளிப்பாடுகளை மதிப்பீடு செய்தோம்
- நிர்வாகத்தால் பயன்படுத்தப்பட்டிருக்கும் தொடர்ந்து இயங்கும் நிறுவனத்தின் அடிப்படையிலான கணக்கியலின் சரியான தன்மையை பெறப்பட்ட தணிக்கைச் சான்றுகளைக்கொண்டு முடிவு செய்தோம், குழுமத்தின் தொடர்ந்து இயங்கும் திறனில் குறிப்பிடத்தக்க அளவிலான சந்தேகத்தை ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பாகப் பொருட்படுத்துகிற அளவிலான நிச்சயமற்ற தன்மை உள்ளதா எனவும் ஆய்ந்தோம். ஒரு பொருள் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக நாங்கள் முடிவு செய்தால், ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் தொடர்புடைய வெளிப்பாடுகளுக்கு எங்கள் தணிக்கையாளரின் அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அல்லது, அத்தகைய வெளிப்பாடுகள் போதுமானதாக இல்லை என்றால், எங்கள் கருத்தை மாற்ற வேண்டும். எங்கள் தணிக்கையாளர் அறிக்கையின் தேதி வரை பெறப்பட்ட தணிக்கைச் சான்றுகளின் அடிப்படையில் எங்கள் முடிவுகள் உள்ளன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்து இயங்கும் தன்மையை நிறுத்தலாம்.
- ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்தக் காட்சிப்பாடு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மற்றும் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகள் ஜப்பானில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகளின்படியான நியாயமான காட்சிப்பாட்டை அடையும் விதத்தில் அடிப்படைப் பரிவர்த்தனைகள் மற்றும் நிகழ்வுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனவா என்பதை நாங்கள் மதிப்பீடு செய்கிறோம்.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகளில் ஒரு கருத்தை வெளிப்படுத்த, குழுமத்தினுள் உள்ள நிறுவனங்கள் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதித் தகவல் தொடர்பான போதுமான தணிக்கைச் சான்றுகளைப் பெற்றோம். குழுமத் தணிக்கை செல்லும் திசை, மேற்பார்வை மற்றும் செயல்பாட்டிற்கு நாங்களே பொறுப்பு. எங்கள் தணிக்கைக் கருத்துக்கு நாங்கள் மட்டுமே பொறுப்பு.

மற்ற விஷயங்களுடன், திட்டமிடப்பட்ட நோக்கம் மற்றும் தணிக்கையின் நேரம் மற்றும் குறிப்பிடத்தக்க தணிக்கைக் கண்டுபிடிப்புகள், எங்கள் தணிக்கையின் போது நாங்கள் அடையாளம் காணும் உள்-கட்டுப்பாட்டில் ஏதேனும் குறிப்பிடத்தக்க குறைபாடுகள் உள்ளிட்டவை குறித்து தணிக்கைக் குழுவுடன் நாங்கள் தொடர்பு கொள்கிறோம்

ஜப்பானில் நடப்பிலுள்ள ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கைக்குப் பொருத்தமான சார்பில்லாமை தொடர்பான நெறிமுறைத் தேவைகளுக்கு நாங்கள் இணங்கியுள்ளோம் என்ற அறிக்கையையும் தணிக்கைக் குழுவுக்கு வழங்குகிறோம், எமது சார்பில்லாமை தொடர்பான அனைத்து உறவுகளையும் மற்ற விஷயங்களையும் பொருந்தக்கூடிய பாதுகாப்புத்தன்மைகளையும் தணிக்கைக் குழுவுக்குத் தெரியப்படுத்தியுள்ளோம்.

தணிக்கைக் குழுவுடன் தெரிவிக்கப்பட்ட விஷயங்களில் இருந்து, தற்போதைய காலக்கட்டத்தின் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளின் தணிக்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை நாங்கள் தீர்மானிக்கிறோம், எனவே அவை முக்கியத் தணிக்கை விஷயங்களாகும். இந்த விஷயத்தைப் பற்றிய பொது வெளிப்பாட்டைச் சட்டம் அல்லது ஒழுங்குமுறைகள் தடுக்காதது வரை, எங்கள் தணிக்கையாளர் அறிக்கையில் இந்த விஷயங்களை விவரிக்கிறோம், அல்லது மிக அரிதான சூழ்நிலைகளில் ஒரு சில விஷயங்களின் பொதுவெளிப்பாட்டால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அத்தகைய தகவல்தொடர்புகளின் பொதுநலன்களை விட அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டால் அந்த விஷயத்தை எங்கள் அறிக்கையில் தெரிவிக்கக்கூடாது என்று நாங்கள் தெரிவிக்கிறோம்.

**ஜப்பானின் சான்றளிக்கப்பட்ட பொதுக் கணக்காளர்கள் சட்டத்தின் படி வெளிப்படுத்தப்பட வேண்டிய பங்குரிமை தொடர்பான விஷயங்கள்**
ஜப்பானின் சான்றளிக்கப்பட்ட பொதுக் கணக்காளர்கள் சட்டத்தின் விதிகளின்படி வெளிப்படுத்தப்பட வேண்டிய, குழுமத்தில் எங்கள் நிறுவனம் மற்றும் அதனால் நியமிக்கப்பட்ட பங்காளிகளுக்கு எந்தப் பங்குரிமைகளும் இல்லை.

**வசதிக்காக செய்யப்பட்ட நாணயமாற்று**
மார்ச் 31, 2023 இல் முடிவடைந்த ஆண்டு தொடர்புடைய ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளில் உள்ள அமெரிக்க டாலர் தொகைகள் வசதிக்காக மட்டுமே வழங்கப்படுகின்றன. எங்கள் தணிக்கையில் ஜப்பானிய யென் தொகைகளை அமெரிக்க டாலர் தொகையாக நாணயமாற்று செய்வதும் அடங்கும், மேலும் எங்கள் கருத்துப்படி, ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்பு 1 இல் விவரிக்கப்பட்டுள்ளவைகளின் அடிப்படையில் அத்தகைய நாணயமாற்று செய்யப்பட்டுள்ளது.

Ernst & Young ShinNihon LLC
டோக்யோ, ஜப்பான்
ஜூலை 31, 2023

Mizuho Financial Group, Inc. ("MHFG") ஒரு பங்குகைகொள் (holding) நிறுவனம். அது அதன் துணை நிறுவனங்கள் மற்றும் இணை நிறுவனங்கள் மூலம் அதன் செயல்பாடுகளை நடத்துகிறது. ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளில் MHFG மற்றும் அதன் துணை நிறுவனங்களான Mizuho Bank, Ltd., Mizuho Securities Co. Ltd., Mizuho Trust & Banking Co. Ltd. மற்றும் சில துணை நிறுவனங்களின் கணக்குகளும் அடங்கும்.

அதிகாரப்பூர்வ பெறுநரால் பராமரிக்கப்படும் நிலை, செயல்பாட்டு முடக்கம்/முடிவு அல்லது அதற்குச் சமமான நடவடிக்கைகள் போன்றவற்றில், வங்கி தனது வெளிநாட்டு அலுவலகங்களின் வைப்பாளர்களுக்கு, ஜப்பானில் உள்ள வைப்புத்தொகையாளர்களைக் காட்டிலும், வைப்புத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் குறைந்த முன்னுரிமையை வழங்க வேண்டியதில்லை என ஜப்பானியச் சட்டங்கள் கூறுகிறன.

கணக்குகளுக்கான குறிப்புகள் நிதிநிலை அறிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்தக் குறிப்புகள் மற்றும் எங்களின் ஒருங்கிணைந்த துணை நிறுவனங்களின் பட்டியலை Mizuho Bank, Ltd., 12 Marina View, #08-01 Asia Square Tower 2, சிங்கப்பூர் 018961 என்ற முகவரியிலுள்ள சிங்கப்பூர் அலுவலகத்திலிருந்து கோரிக்கையின் பேரில் பெறலாம்.